31/8/2001

# தலைமைத்துவத்துக்கு றவூஃப் ஹக்கீம் (தகுதியற்றவர்)



'HATHIBUL HUTHA'
M.M.M. NOORULHAGU J.P
DIPLOMA IN MASS MEDIA
FREELANCE JOURNALIST & WRITER
129B, OSMAN ROAD,
SAINTHAMARUTHU - 05

தியாகத்தால் வளர்த்தெடுத்த
தனித்துவ தீபம்
ஒளிகுன்றி அணைந்திடவும் விடுவதோ?

"DSP NO" 16

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்
"தாருஸ்ஸலாம்" வெளியீட்டகம்
வோக்ஷோல் லேன்,
கொழும்பு - 02.

## அன்பார்ந்த முஸ்லிம் போராளிகளே!
## அஸ்ஸலாமு அலைக்கும் !

*சூழ்ச்சியும் வஞ்சகமும் நமது முஸ்லிம் சமுகத்தைச் சுற்றிச் சுழன்றாடும் இந்த நேரத்திலே இத்துண்டுப் பிரசுரத்தின் மூலம் உங்களுடன் சில விடயங்களைப் பகிர்ந்து கொள்ள விழைகின்றோம்.*

இந்த நாட்டில் தோன்றிய ஸ்ரீ. ல. மு காங்கிரஸ் என்னும் அரசியல் இயக்கமானது மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே பெரும் விருட்சமாக வளர்ந்ததையும் , முஸ்லிம்களை ஒற்றுமைப்படுத்தி இந்தத் தேசத்தின் ஆட்சிக் கட்டிலில் பங்காளியாக அமர்ந்ததையும் நாமறிவோம். இந்த வியத்தகு சாதனைகளுக்குப் பிரதான காரணியாக அமைந்தவர் மர்ஹூம் எம். எச். எம்.. அஷ்ர.்.ப் அவர்களாவார். அஷ்ர.்.ப் அவர்களிடத்தே அமைந்திருந்த தக்க தலைமைத்துவப் பண்புகளினாற்றான் அவரால் இச்சாதனைகளைப் புரிய முடிந்தது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

உண்மையிலேயே மர்ஹூம் அஷ்ர.்.ப் அவர்களிடத்தே ஒரு திறமையான தலைவருக்குரிய அத்தனை பண்புகளும் இருந்தன. களத்தில் துணிவும், சொல்லில் உறுதியும் , நடத்தையில் கம்பீரமும் , முடிவுகளில் சாணக்கியமும் தீர்மானங்களில் தூர நோக்கும் அவரிடத்தே அமைந்திருந்தன. சுயநலத்தைக் கைவிட்டு சமுகத்தின் உயர்வுக்காகப் பாடுபடுகின்ற அர்ப்பண சிந்தையுடன் மர்ஹூம் அஷ்ர.்.ப் இயங்கினார். இடர்கள் எத்தனை வந்த போதும் அஞ்சாது , கண் துஞ்சாது தன்னுடைய சமுகத்தின் மேம்பாட்டுக்காக அவர் போராடினார். கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அவர் கண்ணும் கருத்துமாக இருந்தார். சவால்களைச் சந்திப்பதிலும் அவற்றில் வெற்றி பெறுவதிலும் அவர் ஒப்பாரும் மிக்காருமில்லாதவராக விளங்கினார்.

நான்கு உறுப்பினர்களோடு பாராளுமன்றத்திற்குச் சென்ற போதும் சரி , ஏழு உறுப்பினர்களோடு பாராளுமன்றத்திற்குச் சென்ற போதும் சரி மர்ஹூம் அஷ்ர.்.ப் அவர்களின் ஒவ்வொரு சொல்லிலும், ஒவ்வொரு செயலிலும் வீரமும் விவேகமும் மலிந்து கிடந்தன. மொத்தத்தில் மர்ஹூம் அஷ்ர.்.ப் அவர்கள் தலைமைத்துவத்திற்கான அனைத்து ஆளுமைகளையும் தன்னகத்தே கொண்டிருந்தார் என்று கூறின் அது மிகையல்ல.

ஆனால்...........

தலைவர் அஷ்ர.்.ப் அவர்களின் மறைவின் பின்னர் 'இந்த நாட்டு முஸ்லிம்களுக்கு இனி யார் தலைமை தாங்குவார் ? ' என்ற கேள்விக்கு மக்கள் விடையை யோசிப்பதற்குள்ளாகவே இணைத்தலைவர்களாக .்.பேரியல் அஷ்ர.்.பும் , றவூப் ஹகீமும் தெரிவு செய்யப்பட்டு விட்டனர். பேரியல் அஷ்ர.்.ப் தனது கணவரின் மறைவின் பின்னால் 'இத்தாக்' கடமையை நிறைவேற்றச் சென்றுவிட்டதனால் அவரின் தலைமைத்துவப் பண்புகளைப் பற்றி விரிவாகக் கூற முடியவில்லை. ஆனால் இதுவரை காலமும் எல்லா முடிவுகளையும்



எடுக்கின்ற இணைத் தலைவராகவும் ,எதிர்காலத்தில் ஏக தலைவராக வேண்டுமென்ற கனவுகளில் மிதப்பவருமான றவூப் ஹக்கீம் தலைமைத்துவத்திற்குத் தான் எந்த விதத்திலும் தகுதியற்றவர் என்று இந்தக் குறுகிய காலத்துக்குள்ளேயே நிருபித்து விட்டார்.

முஸ்லிம் போராளிகளே!

மறைந்த தலைவர் அஷ்ர.்.ப் அவர்களிடத்தேயிருந்த தலைமைத்துவப் பண்புகளில் ஒரு பண்புதானும் றவூப் ஹக்கீமிடம் இல்லை என்ற கசப்பான உண்மையை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். இதோ, ஒன்றன்பின் ஒன்றாக றவூப் ஹக்கீமின் அண்மைக்கால சிறுபிள்ளைத் தனமான அரசியல் நடத்தைகளையும் , ஒரு தலைவராக இருப்பதற்கு எவ்விதத்திலும் அவருக்குத் தகுதி கிடையாதென்பதையும் ஒரு சில உதாரணங்கள் மூலம் கூறுகிறோம் , படித்துப் பாருங்கள்.

(1) றவூப் ஹக்கீம் ஸ்ரீ.ல.மு காங்கிரஸின் இணைத் தலைவராகச் செயற்பட ஆரம்பித்த சில தினங்களுக்குள்ளாகவே ஒரு பெரும் குண்டைத் தூக்கிப் போட்டார். சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு , சுயாதீனத் தேர்தல் ஆணைக்குழு, சுயாதீன அரச சேவைகள் ஆணைக் குழு, சுயாதீன நீதிமன்ற ஆணைக்குழு ஆகிய நான்கையும் நூறு நாட்களுக்குள் அரசாங்கம் நியமிக்க வேண்டுமென்றும் இல்லாவிட்டால் அரசாங்கத்திற்கு வழங்கப்படும் ஆதரவை விலக்கி தாம் அரசாங்கத்திலிருந்து இராஜினாமாச் செய்யப் போவதாகவும் றவூ.்.ப் ஹக்கீம் சொன்னதுதான் அந்த வேடிக்கையான குண்டு. இவ்வாறு காலக்கெடு விதிப்பதென்பது ஒரு நல்ல தலைவருக்குரிய பண்பல்ல. இது முதிர்ச்சியற்ற பாமரத்தனமான ஒருவரின் கூற்றைப் போன்றதாகும். தான் வீறாப்புடன் சொல்லுகின்ற ஒன்றைச் செய்ய முடியுமா என்று சிந்திக்காமற் சொல்வது அறிவிலித்தனமான அரசியல் வாதிகளின் செயலேயன்றி நல்லதொரு தலைவரின் செயலல்ல.

றவூ.்.ப் ஹக்கீம் அரசாங்கத்திற்கு விதித்த நூறு நாட்கள் காலக்கெடு என்பது ஜனவரி மாதம் 27ம் திகதியுடன் முடிவடைந்து விட்டது. ஆனால் இப்போது றவூப் ஹக்கீம் அரசாங்கத்திலிருந்து விலகவோ தனது பதவியை ராஜினாமாச் செய்யவோ தயாரில்லை என்பதை அவரது அண்மைக்காலப் பேச்சுக்கள் உணர்த்துகின்றன. இது நயவஞ்சகத்தனமாகும்.

1994ம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தின் பிரதேச சபைத் தேர்தலில் குறிப்பிட்ட ஆசனங்களைப் பெற முடியாது போனால் தன்னுடைய பதவியை ராஜினாமாச் செய்யப் போவதாக சூளுரைத்த மர்ஹூம் அஷ்ரப் தான் சொன்னது போலவே தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துச்சமாகக் கருதித் தூர வீசியெறிந்தார். ஆனால் றவூப் ஹக்கீமினால் அவ்வாறு செய்ய முடியாது. ஏனெனில் அவர் மர்ஹூம் அஷ்ரப்பைப் போன்ற வீரமும், நேர்மையும், வாக்குறுதியைக் காப்பாற்றும் தன்மைகளுமுள்ள தலைவரல்ல. எனவே வெறும் மந்த புத்தியுடன் சவால் விடுகின்றவரும் , பின்னர் கோழைத்தனமாகத் தனது

சவாலிலிருந்து பின் வாங்குபவருமான றவூ.ஃப் ஹக்கீம் ஸ்ரீ. ல. மு. காங்கிரஸின் தலைவராகவோ, இணைத் தலைவராகவோ இருப்பதற்கு எவ்வித அருகதையுமற்றவர் என்பது இதன் மூலம் விளங்குகின்றது.

(2) தேர்தல் முடிந்த கையோடு றவூ.ஃப் ஹக்கீம் தன்னிலை மறந்து தனது சுயலாபத்திற்காக ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஓர் உடன்பாட்டுக்கு வர முற்பட்டார். இவ்வாறு அவர் உடன்பாட்டுக்கு வந்திருப்பாரேயானால் அம்பாறை மாவட்டத்தில் பொது ஐக்கிய முன்னணியின் கீழ் தெரிவான ஸ்ரீ.ல.மு காங்கிரஸின் நான்கு உறுப்பினர்களும் பெரும் இக்கட்டுக்குள் மாட்டியிருப்பார்கள். அது மட்டுமல்லாது ஸ்ரீ.ல.மு காங்கிரஸும் பலமிழந்து போயிருக்கும். ஆனால் அதுபற்றியெல்லாம் எவ்வித அக்கறையுமில்லாமல் றவூப் ஹக்கீம் தனது ஒரேயொருவரின் நலனுக்காக யூ.என்.பீ யின் காலடிக்குச் சென்று பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார். என்றாலும் ஸ்ரீ.ல.மு காங்கிரஸின் பலம் குன்றி விடாது அல்லாஹ் பாதுகாத்தான். அதனாற்றான் றவூப் ஹக்கீம் - யூ.என்.பீ பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. இல்லாவிட்டால் முஸ்லிம்களுக்குப் பெரும் விபரீதமே நிகழ்ந்திருக்கும். இவ்வாறு தன் ஒரேயொருவரின் நலனுக்காக முஸ்லிம் காங்கிரஸையும் , முழு முஸ்லிம் சமுகத்தையும் விலைபேச முயன்ற றவூப் ஹக்கீம் ஸ்ரீ.ல.மு காங்கிரஸின் தலைவராக இருப்பதற்கோ இணைத்தலைவராக இருப்பதற்கோ எவ்விதத்திலும் பொருத்தமற்றவர் என்பதை முஸ்லிம் சமுகம் அறிந்து கொள்ள வேண்டும்.

(3) தேசியப் பட்டியலில் றவூப் ஹக்கீமின் சிபார்சுகளினால் பஷீர் சேகுதாவூத் நியமிக்கப்பட்டது றவூப் ஹக்கீமின் மோசமான தலைமைத்துவத்துக்கு மற்றுமொரு உதாரணமாக இருக்கிறது. பஷீர் சேகுதாவூத் முன்னர் ஈரோஸ் என்ற ஆயுதக் குழுவின் உறுப்பினராக இருந்தவர். தமிழீழம் என்ற போர்வையில் பஷீர் சேகுதாவூதும் நாடகமாடி மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான பல வன்செயல்களில் ஈடுபட்டவர்.

அகஸ்மாத்தாக ஈரோஸ் பட்டியலில் முன்னர் எம்.பீ. யான பஷீர் சேகுதாவூத் தான் எம்.பீ யாகவிருந்த காலத்தில் சுளை சுளையாகச் சம்பாதித்தவர். பின்னர் 1994 ம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றவர். அதன் பின்னர் தலைவர் அஷ்ர.ஃபிடமிருந்து வாகனமும் , மாதம் முப்பதினாயிரம் ரூபாவுக்கும் கூடுதலான வருமானத்தையும் பெற்று சொகுசு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தவர்.

ஸ்ரீ.ல.மு காங்கிரஸின் கொள்கைப் பரப்புச் செயலாளராகவும் இருந்த பஷீர் சேகு தாவூத் ஸ்ரீ.ல.மு காங்கிரஸின் எந்தவொரு கொள்கையையும் பரப்பியதில்லை. மாறாக என்.ஜீ ஓ என்ற பெயரில் தமிழ்ப் பெண்களைக் கொழும்புக்குக் கொண்டு வருவதும் , அவர்களோடு சல்லாபம் புரிவதும், அவர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறிப் பணம் பறிப்பதுமே இவரது கொள்கைகளாக இருந்தன.



இவரைப் பற்றிய எல்லா விடயங்களையும் தெரிந்திருந்தும் கூட றவூ.ஃப் ஹக்கீம் இவருக்கு ஸ்ரீ.ல.மு. காங்கிரஸின் தேசியப் பட்டியல் உறுப்பினர் நியமனம் வழங்கியிருக்கிறார் என்றால் , றவூ.ஃப் ஹக்கீமின் தலைமைத்துவம் எவ்வளவு கேவலமாகக் கீழிறங்கியுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம். அதுமட்டுமல்ல, மட்டக்களப்பு மாவட்டத்தில் 23,000 விருப்பு வாக்குகளைப் பெற்றவர் ஹிஸ்புல்லாஹ். ஓர் ஐநூறு வாக்குகள் வித்தியாசத்தினாலேயே அவர் தோல்வியைத் தழுவினார். ஆனாலும் ஹிஸ்புல்லாஹ் முஸ்லிம் காங்கிரஸின் உதயத்திலிருந்து அதனோடு தன்னைப் பிணைத்துக் கொண்டவர். கட்சிக்காகப் பல தியாகங்கள் செய்தவர். கட்சிக்காகப் பாடுபட்டதனால் பலமுறை இவரைக் கொலை செய்துவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எனினும் கூட கட்சிக்காகத் தனது உயிரைத் துச்சமென மதித்து நின்றவர். மறைந்த தலைவர் அஷ்ர.ஃப் அவர்களின் தத்துப் பிள்ளை போல் கட்சிக்குள் வளர்ந்தவர். இப்படியான ஹிஸ்புல்லாஹ்வைப் புறக்கணித்துவிட்டு வெறும் 8,000 வாக்குகள் பெற்ற பஷீர் சேகுதாவூதிற்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்க றவூ.ஃப் ஹக்கீம் முடிவெடுத்தாரென்றால் , றவூ.ஃப் ஹக்கீமின் மடத்தனத்தைப் பற்றி இன்னும் கூறத் தேவையில்லை. இவ்வாறான ஒரு 'மறை கழன்ற' றவூ.ஃப் ஹக்கீம் ஸ்ரீ.ல.மு காங்கிரஸின் தலைவராகவோ , இணைத் தலைவராகவோ வந்தால் அது ஸ்ரீ.ல. முஸ்லிம் காங்கிரஸின் அழிவுக்கான அடித்தளம்தான் என்பதை முஸ்லிம் போராளிகள் ஒரு போதும் மறந்துவிடக் கூடாது.

(4) இவ்வாறே றவூ.ஃப் ஹக்கீம் பிரதியமைச்சர்கள் விடயத்திலும் புத்தி தெளிவில்லாமல் நடந்து கொண்டிருக்கிறார். ஸ்ரீ.ல.மு காங்கிரஸுக்காகப் பல தியாகங்களைப் புரிந்த யூ.எல்.எம் முஹைதீனுக்குப் பிரதியமைச்சர் பதவி வழங்காமல் எவ்வித அனுபவமுமற்ற அதாவுல்லாஹ் போன்றோருக்குப் பிரதியமைச்சர் பதவிகள் வழங்கியிருக்கிறார். இவருக்கு ஆங்கிலம் பேச முடியாது. சிங்களம் பேச இயலாது. இவ்வாறான 'மக்கு'களுக்குப் பிரதியமைச்சர் பதவிகள் வழங்கிய றவூ.ஃப் ஹக்கீம் சட்டத்தரணியும், அரசியல் ஞானமும் , முன்னர் பிரதியமைச்சராகவிருந்த அனுபவமும் உள்ள யூ.எல்.எம் மொஹிதீனுக்கு ஏன் பிரதியமைச்சர் பதவியை வழங்கவில்லை?

உண்மையிலேயே பிரதியமைச்சர் பதவிகளுக்காக ஜனாதிபதியிடம் ஆரம்பத்தில் றவூ.ஃப் ஹக்கீமினால் கையளிக்கப்பட்ட பட்டியலில் நான்கு பேரின் பெயர்களே இருந்தன. அதில் முதலாவது யூ.எல்.எம் மொஹிடீன் . இரண்டாவது அதாவுல்லாஹ். மூன்றாவது முஹிதீன் அப்துல் காதர். நான்காவது மஷூர் . ஆனால் இறுதி நேரத்தில் பாலபட்டபெந்திக்கு டெலிபோன் பண்ணிய றவூ.ஃப் ஹக்கீம் முதலாவதாக இருந்த யூ.எல்.எம். மொஹிடீனுக்குப் பதிலாக நான்காவதாக இருந்த மஷூரின் பெயரைப் போடச் சொல்லியதாலேயே யூ.எல்.எம் முஹிடீனுக்குப் பிரதியமைச்சர் பதவி கிடைக்காமற் போனது. இப்படி நடக்கவில்லையென்று றவூ.ஃப் ஹக்கீமினால் சத்தியம் செய்து கூற முடியுமா?

இந்தப் பிரதியமைச்சர் நியமனத்தில் றவூ.ஃப் ஹக்கீம் பெரும் தொகைப் பணத்தை இலஞ்சமாகப் பெற்றக் கொண்டதாகவும் கூறப்படுகிறது. எனவே

இப்படியான ஒருவர் ஸ்ரீ.ல.மு காங்கிரஸுக்குத் தலைவராக வர முடியுமா? என்பது பற்றி முஸ்லிம் போராளிகளே , நீங்களே முடிவு செய்யுங்கள்!

(5) அனுருத்த ரத்வத்தைக்குப் பாதுகாப்புப் பிரதியமைச்சர் பதவி கொடுக்கக் கூடாது என்றும் , அனுருத்த ரத்வத்தை இருக்கும் அமைச்சரவையில் நான் இருக்க மாட்டேன் என்றும் கூறியவர் றவூஃப் ஹக்கீம் . ஆனால் உண்மை என்ன? இன்று தான் சொன்னதை மறந்து விட்டு , ஒரு பெட்டைப் பிள்ளையைப் போல் றவூஃப் ஹக்கீம் அனுருத்த ரத்வத்தையோடு ஒரே அமைச்சரவையில் இருக்கிறார். இவ்வாறு சொல்லொன்றும் செயலொன்றுமாக நடந்து கொள்வது தலைமைத்துவப் பண்பு அல்ல. அது முனாஃபிக் தனத்தின் வெளிப்பாடு. இவ்வாறு முனாஃபிக் தனமாக இயங்கும் றவூஃப் ஹக்கீம் ஸ்ரீ.ல.மு காங்கிரஸின் தலைவராக வருவதற்குக் கொஞ்சமேனும் தகுதியற்றவர் என்பதை முஸ்லிம் போராளிகள் உணர்ந்து கொள்வது அவசியமாகும.

(6) முஸ்லிம் சமய விவகார அமைச்சருமான றவூஃப் ஹக்கீமுக்கு ஒரு பிறைக் குழுவையே ஒழுங்காக அமைக்க முடியாமற் போனது வெட்கப்பட வேண்டிய விடயமாகும். அவர் பதவியேற்ற மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே பிறைக் குழுவின் தலைவரும், ஜம்இய்யத்துல் உலமா சபையின் செயலாளருமான றியாழ் மௌலவி கொழும்பு பெரிய பள்ளிவாசலில் வைத்துத் தாக்கப்பட்டார். இதற்கு றவூஃப் ஹக்கீமின் பிழையான அணுகுமுறையே காரணமாகும். இதனால் முழு முஸ்லிம் சமூகத்தையும் பார்த்து மாற்று மதத்தைச் சேர்ந்தவர்கள் கேவலமாகச் சிரிக்கும் நிலை தோன்றிவிட்டது. இவ்வாறு பக்குவமற்ற அரசியல் நடாத்தும் றவூஃப் ஹக்கீம் ஸ்ரீ.ல.மு காங்கிரஸின் தலைவரானால் றியாழ் மௌலவி மட்டுமல்ல, முழு முஸ்லிம் சமூகமும் அடிபட்டு , அவமானப்படும் நிலை தோன்றிவிடும். ஆகையால் றவூஃப் ஹக்கீம் தலைமைத்துவத் தகுதியில்லாதவர் என்பதை உணர்ந்து அவரை ஒதுக்கிவிட்டு விட வேண்டியதே முஸ்லிம் சமூகத்தின் உடனடிப் பணியாக இருக்க வேண்டும்.

(7) இந்த நாட்டில் தேசிய அரசாங்கம் அமைக்க வேண்டும் என்று சிங்கள மகாநாயக்க தேரோக்களுடன் சேர்ந்து கொண்டு சொன்னவர் றவூஃப் ஹக்கீம் . தேசிய அரசாங்கம் அமைந்தால் ஸ்ரீ.ல.மு காங்கிரஸின் பலம் அத்தோடு ஒழிந்து போகும். அதன்பின் முஸ்லிம் சமூகத்தின் விடுதலைக்காக யாரும் குரலெழுப்ப முடியாது. முஸ்லிம் சமூகத்தின் விடுதலைக்காக யாரும் போராட முடியாது. எனவே முஸ்லிம் சமூகத்தைத் தேசிய அரசாங்கத்திற்கு அடகு வைக்கத் துணிந்த றவூஃப் ஹக்கீம் எவ்வாறு ஸ்ரீ.ல.மு காங்கிரஸின் தலைவராக இருக்க முடியும்? முஸ்லிம் போராளிகளே ......சிந்தியுங்கள்!

(8) நாட்டுக்குத் தேசிய அரசாங்கம் தேவை என்று சொன்ன ஹகீம் கண்டி முஸ்லிம்களுக்குத் தனி மாவட்டம் தேவை என்று கூறுகிறார். இதனைத்தான் பித்தலாட்ட அரசியல் என்று சொல்வார்கள். கண்டிக்குத் தனி முஸ்லிம் மாவட்டம் கேட்பதனால் கண்டியிலுள்ள முஸ்லிம் - சிங்கள மக்களுக்கிடையே குரோதத்தையும் , கலவரத்தையும் ஏற்படுத்தி அதில்



குளிர்காய முயற்சிக்கிறார் றவூஃப் ஹக்கீம். கண்டி முஸ்லிம் மக்கள் சிங்களவர்களினால் அடிபட , கொல்லப்பட றவூஃப் ஹக்கீம் - கார்னிவலில் உட்கார்ந்து ஐஸ்கிரீம் சாப்பிடுவார். இவ்வாறு தூரதிருஷ்டியற்றுப் பேசும் றவூஃப் ஹக்கீமுக்குத் தலைமைத்துவத் தகுதி என்பது மருந்துக்குக் கூட இல்லையென்பதை முஸ்லிம் சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டும். அது மாத்திரமல்ல, இது தென்கிழக்கு அழகையோ அல்லது வட,கிழக்கு முஸ்லிம்களின் தனித்துவத்தையோ சிங்கள மக்களை எதிர்த்துப் போராடத் தூண்டி விடும் ஒரு பேச்சு என்பதைக் கூட புரிந்து கொள்ளத் தெரியாதவர்தான் றவூஃப் ஹக்கீம்.

(9) மர்ஹூம் அஷ்ரஃப் அவர்கள் துறைமுக அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சைக் கடந்த அரசாங்கத்திடம் கேட்டு வாங்கியது மக்களுக்கான - குறிப்பாக முஸ்லிம் மக்களுக்கான சேவைகளைச் செய்யவே. அதன்மூலம் அவர் வடக்கு-கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு ஏராளமான சேவைகள் செய்தார். தனது அமைச்சின் கீழிருந்த துறைமுகத்தில் விமர்சனங்களையும் பொருட்படுத்தாமல் முஸ்லிம்கள் பல்லாயிரக் கணக்கானோருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கினார். ஆனால் றவூஃப் ஹக்கீமோ கப்பற்துறை அபிவிருத்தி , வர்த்தக வாணிப அமைச்சை ஜனாதிபதியிடம் கேட்டு வாங்கினார். இந்த அமைச்சின் மூலம் அவர் ஏழை , எளிய மக்களுக்கு எவ்வித சேவைகளையும் செய்ய முடியாது. ஆனால் கொழுத்த பணக்காரர்களுக்கும் , முதலாளிகளுக்கும் , தொழிலதிபர்களுக்கும் நிறைய உதவிகள் புரியலாம். அதன் மூலம் தனது பணபலத்தை உயர்த்திக் கொள்ளலாம். எனவே, சமூகத்திற்குச் சேவை செய்யக்கூடிய ஓர் அமைச்சைக் கேட்டு வாங்காமல் , பண முதலைகளுக்குச் சேவகம் புரியும் வகையில் ஓர் அமைச்சை றவூஃப் ஹக்கீம் கேட்டு வாங்கினாரென்றால் , இவர் முஸ்லிம் சமூகத்தின் தலைவராக வர முடியுமா? அவரை நாம் தலைவராக வர விடலாமா.......? தயவு செய்து சிந்தியுங்கள்!

(10) மறைந்த தலைவர் அஷ்ரஃப் அவர்களின் கனவுகளில் ஒன்றான ஒலுவில் துறைமுக அவிபிவிருத்தியைத் தான் பொறுப்பேற்கவுள்ளதாகவும் - சில சமயங்களில் பொறுப்பேற்றுக் கொண்டதாகவும் கூறிய றவூஃப் ஹக்கீம் தற்போது இவ்விடயத்தில் ஏன் மௌனம் சாதிக்கிறார்? உண்மையிலே ஒலுவில் துறைமுகம் யாருடைய அதிகாரத்தின் கீழ் இயங்குகிறது? மறைந்த தலைவரின் கனவுகளை நனவாக்குவதுதான் இனியும் முஸ்லிம் காங்கிரஸுக்குத் தலைமை தாங்கப் போகின்றவரின் தகுதியாகவும் , இலட்சியமாகவும் இருக்க வேண்டும். ஆனால் றவூஃப் ஹக்கீம் ஒலுவில் துறைமுக விடயத்தில் கோட்டை விட்டுவிட்டார். எனவே தலைவராகும் தகுதி றவூஃப் ஹக்கீமுக்குச் சிறிதளவேனும் இல்லையென்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

(11) ஒக்டோபர் 19ம் திகதியன்று இணைத் தலைவர் றவூஃப் ஹக்கீம் , பாராளுமன்ற உறுப்பினர் யூ.எல்.எம் மொஹிதீன் , மூத்த துணைத் தலைவர் மருதூர்க்கனி, கட்சியின் சர்வதேச விவகாரப் பணிப்பாளர் நஸீர் அகமது ,

செயலாளர் ஹூ.ஃப்ரத் , மஷுர் மௌலானா , என்.எம் ஷஹீட் ஆகிய எட்டுப் பேரும் ஜனாதிபதியைச் சந்திப்பது என்று கட்சியின் அதியுயர்பீடம் எடுத்த முடிவை உதாசீனம் செய்த றவூ.ஃப் ஹக்கீம் மிகுதி ஏழு பேரையும் தாருஸ்ஸலாமில் காக்க வைத்துவிட்டு , அவர்களுக்குத் தெரியாமல் தான் மட்டும் ரகஸ்யமாகச் சென்று ஜனாதிபதியைச் சந்தித்துவிட்டு வந்தார். இவ்வாறு அரசியல் அதியுயர்பீடம் எடுத்த முடிவுக்கு நேர்மாற்றமாகச் செயற்படுகின்ற றவூ.ஃப் ஹக்கீமுக்குத் தலைவர் பதவியைக் கொடுத்தால் என்னாகும் என்று சிந்தித்துப் பாருங்கள்.

(12) தற்போது முனைப்புக் கொண்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இலங்கை முஸ்லிம்களின் சார்பில் என்ன கோரிக்கைகளை முன்வைப்பது என்பது பற்றியோ , எவ்விதமான அணுகுமுறைகளைக் கையாள்வது என்பது பற்றியோ றவூ.ஃப் ஹக்கீமிடம் எவ்விதத் திட்டங்களும் இல்லை. வடகிழக்கு முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம் , வாழ்விட உரிமை , பாதுகாப்பு , நிம்மதி என்ற எதைப்பற்றிய தெளிவும் , புரிந்துணர்வும் றவூ.ஃப் ஹக்கீமிடம் கிடையாது. எனவே இப்படிப்பட்ட ஓர் அரசியல் ஞானசூனியத்தை ஸ்ரீ.ல.மு. காங்கிரஸின் தலைவராக்கினால் இலங்கை முஸ்லிம்களின் எதிர்காலமே இருண்டுவிடும் என்பதை ஒவ்வொரு முஸ்லிம் போராளியும் ஞாபகத்திற் கொள்ள வேண்டும்.

(13) தலைவர் அஷ்ர.ஃப் அவர்களின் மரணத்தின் பின்னர் இணைத் தலைவர்களில் ஒருவரான ஃபேரியல் அஷ்ர.ஃப் நான்கு மாதங்கள் பத்து நாட்கள் இத்தா இருந்த நிலையில் றவூ.ஃப் ஹக்கீமின் கையிலேயே முஸ்லிம் காங்கிரஸ் தொங்கிக் கொண்டிருந்தது. ஆனால் இந்த நாட்களுக்குள்ளாக றவூ.ஃப் ஹக்கீம் தனது புத்தி சுவாதீனமற்ற அரசியல் நடத்தைகளின் காரணமாக சிங்கள , தமிழ் மக்களின் பெரும் வெறுப்புக்கு ஆளாகி விட்டார். றவூ.ஃப் ஹக்கீமின் இந்தப் பேய்த்தனமான - கிறுக்குத்தனமான அரசியல் நடத்தைகளின் காரணமாக முழு முஸ்லிம் சமுகமும் தனது சுய கௌரவத்தையும் , சுய மரியாதையையும் இழக்கும்படி ஆகிவிட்டது. தான் எப்படியாவது ஸ்ரீ.ல.மு. காங்கிரஸின் தலைவராகிவிட வேண்டுமென்ற வெறியில் றவூ.ஃப் ஹக்கீம் பிதற்றிய பிதற்றல்களினால் இன்று இலங்கை முஸ்லிம் சமுகமும் , முஸ்லிம் போராளிகளும் வெட்கமும், வேதனையும் அடைய வேண்டியதாகப் போய்விட்டது. இவ்வாறான ஒரு அரசியல் முதிர்ச்சியற்றவரிடம் ஸ்ரீ.ல.மு. காங்கிரஸின் தலைமைத்துவத்தை ஒப்படைக்கலாமா? என்பது பற்றி முஸ்லிம் போராளிகள் ஆற, அமரச் சிந்திக்க வேண்டும்.

(14) கிழக்கில் உதயம் பெற்றதுதான் ஸ்ரீ..ல.மு. காங்கிரஸ் . கிழக்கு மாகாணத்தின் இரத்தத்தினாலும் , வியர்வையினாலும் , கண்ணீரினாலுமே ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் என்ற இந்தப் பாரிய மாளிகை கட்டி எழுப்பப்பட்டதென்பதை யாரும் மறுக்க முடியாது. நாட்டின் ஏனைய பிரதேச முஸ்லிம்களில் ஓரளவானோர் இக்கட்டிடம் எழுந்து நிற்க ஓரளவு உதவிகள் செய்திருக்கிறார்கள் என்றாலும் பாரிய பங்களிப்பை நல்கியவர்கள் கிழக்கு மாகாண முஸ்லிம்களே என்பதில் இரண்டு கருத்துக்களுக்கு இடமில்லை. கிழக்கு மாகாண முஸ்லிம்களைத்



தவிர்த்து விட்டு ஒரு ஸ்ரீ.ல.மு. காங்கிரஸைக் கற்பனை பண்ணிக்கூடப் பார்க்க முடியாதென்பதே யதார்த்தம்.

இந்த வகையில் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸின் மூலம் வென்றெடுக்கப்பட்ட சலுகைகளாயிருந்தாலும் , உரிமைகளாயிருந்தாலும் அதிற் கணிசமான பங்கு கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களுக்கே போய்ச் சேர வேண்டும். இதுதான் தார்மீகமும், தர்மமும் . மறைந்த தலைவர் அஷ்ர.ஃப் கூட இந்த விடயத்தில் மிகத் தெளிவாகவும், உறுதியாகவும் இருந்தார். தன்னுடைய நியமனங்களில் , சேவைகளில் அவர் கிழக்கு மாகாணத்திற்கே முக்கிய இடமளித்து வந்தார்.

ஆனால் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் என்ற கட்சியின் மூலம் வளர்ந்து ,பாராளுமன்ற உறுப்பினராகி , இன்று அமைச்சருமாகியிருக்கும் றவூ.ஃப் ஹக்கீம் ஏதோ ஒப்புக்கு ஒன்றிரண்டு நியமனங்களைக் கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு வழங்கிவிட்டு ஏனையவற்றைத் தனக்கு வேண்டிய - தன்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கே வழங்கியிருக்கிறார். இது நடைமுறையையும், ஒழுங்கையும் , யதார்த்தத்தையும் மீறிய தான்தோன்றித்தனமான நடவடிக்கையாகும்.

றவூ.ஃப் ஹக்கீம் தனது அமைச்சிலே வழங்கியுள்ள நியமனத்தில் ஹஸனலி மட்டுமே கிழக்கு மாகாணத்தவர். ஏனைய அனைவரும் கிழக்கிற்கு வெளியே உள்ளவர்கள்.

உதாரணமாக அவரது இணைப்பாளர்களான சியாது, என்.எம் அமீன் மற்றும் ஆலோசகரான என்.எம் ஷஹீட் , எம்.எச்.எம் ஸல்மான், பாருக் மஜீட் , முஸம்மில் ஹாஜியார் போன்றோரெல்லாம் கிழக்குக்கு வெளியில் உள்ளவர்களே. இது முரண்பாடானதும் , கிழக்கு மக்களை அவமானத்திற்குள்ளாக்குவதுமாகும்.

அதுமட்டுமன்றி ஹஜ் கமிட்டியில் றவூ.ஃப் ஹக்கீம் நியமித்திருக்கும் 15 பேரில் கலீல் மௌலவியைத் தவிர ஏனைய பதினான்கு பேரும் கிழக்குக்கு வெளியேயுள்ளவர்கள். இந்த ஹஜ் கமிட்டியிலேயே கிழக்கு மாகாணத்திற்கு ஒன்றும், வெளி மாகாணத்திற்குப் பதினாலும் என்ற விகிதத்தில் இப்போதே செயற்படும் றவூ.ஃப் ஹக்கீமுக்குத் தலைவர் பதவியை நிரந்தரமாகக் கொடுத்தால் கிழக்கு மாகாணத்தின் கதி அதோகதிதான் என்பதைப் போராளிகள் புரிந்து கொள்ள வேண்டும். கிழக்கு மாகாணம் புறந்தள்ளப்பட்டால் அது ஸ்ரீ.ல.மு. காங்கிரஸின் பேரழிவுக்கான கட்டியமாகத்தான் இருக்குமென்பதை உணர்ந்து முஸ்லிம் போராளிகள் றவூ.ஃப் ஹக்கீம் தலைவராவதைத் தடுத்து நிறுத்த ஒன்றுபட வேண்டியது அவசியமாகும்.

அவ்வாறே அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக ஏ.ஜே.எம் முஸம்மிலை றவூ.ஃப் ஹக்கீம் நியமித்திருப்பதும் . முஸ்லிம் காங்கிரஸில் ஏ.ஜே.எம் முஸம்மில் இணைந்தது கடந்த பொதுத் தேர்தல் காலத்தில்தான். அதற்கு முன்னம் அவர் ஒரு வியாபார புரோக்கராகத்தான் இருந்தார்.

கொழும்பில் போட்டியிட்டுத் தோற்றுப் போனவர் முஸம்மில். தோற்றுப்

போனவர் என்பது ஒரு புறமிருக்க ,ஸ்ரீ.ல.மு காங்கிரஸுக்காக அவர் செய்த சேவைகளோ , தியாகங்களோ ஒன்றுமேயில்லை என்பதை நாம் உணர வேண்டும்.

தேர்தலிற் தோற்றுப் போனதும் காடையர்களைக் கூட்டிக் கொண்டு வந்து றவூ..ப் ஹக்கீமின் வீட்டுக்குக் கல்லால் எறியச் செய்தவர் முஸம்மில். தனக்கு தேசியப் பட்டியலில் இடம் கிடைக்காவிட்டால் கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாகவும் அச்சுறுத்தல் விடுத்தவர்.

இத்தகைய ஒருவரை ஏன் தனது அமைச்சின் கீழான அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக றவூ..ப் ஹக்கீம் நியமித்தார்? கொழும்பைச் சேர்ந்த ஒருவருக்குத்தான் அதைக் கொடுக்க வேண்டுமென்று றவூ..ப் ஹக்கீம் தீர்மானித்தால், அப்பதவிக்குக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான பட்டதாரி முர்ஷிதீனையோ , சட்டத்தரணி ரீ.கே அஸூரையோ நியமித்திருக்கலாமே! இவர்கள் கட்சிக்காக எத்தனையோ வழிகளில் பாடுபட்டவர்கள். ஆனால் கட்சிக்குப் பாடுபட்டவர்களை விட றவூ..ப் ஹக்கீமுக்குக் காடைத்தனத்தில் ஈடுபடுவோரும், பணபலம் மிஞ்சியோருந்தான் பெரிதாகப் போய்விட்டார்கள். அதனாற்றான் இஸ்லாம் பாடம் உட்பட க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் எட்டுப் பாடங்களிலும் ..பெயிலான முஸம்மில் ஹாஜியாருக்கு அரச வர்த்தகக் கூட்டுத்தாபன தலைவர் பதவியை றவூ..ப் ஹக்கீம் வழங்கியுள்ளார். இப்படியான நெஞ்சுரமற்ற , சாணக்கியமற்ற, முதுகெலும்பற்ற ஒரு தலைமைத்துவம் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸுக்கு அவசியம்தானா என்று போராளிகள் சிந்திக்க வேண்டும்.

(15) தான் முஸ்லிம் சமய விவகார அமைச்சரானவுடனேயே தேசிய மீலாத் விழாவை கண்டி மாவட்டத்து அக்குறணையில்தான் நடத்த வேண்டுமென்று றவூ..ப் ஹக்கீம் பிடிவாதம் பிடித்து அக்குறணையில் நடத்துவதற்கான ஒழுங்குகளையும் செய்து வருகிறார். இதிலிருந்தே இவரது பிரதேசப் பார்வை நன்கு விளங்குகிறதே! இந்த தேசிய மீலாத் விழாவுக்கு இவருக்குப் பத்துக் கோடி ரூபா பணமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தனை பணமும் அக்குறணையின் அபிவிருத்திக்கென்றால் ஏனைய பிரதேச முஸ்லிம்கள் என்ன, இளிச்சவாயர்களா? கிழக்கு மாகாணத்து மக்களின் வாக்குகளாலேயே றவூ..ப் ஹக்கீம் இன்று அமைச்சராகியிருக்கிறார். ஆனால் அதனை மறந்துவிட்டு, அக்குறணைக்குச் சேவை செய்வதிலேயே ஆர்வம் காட்டுகிறார். உண்மையிலேயே பிரதேசவாதம் பார்க்காத தலைவர் அவர் என்றால் , தான் முஸ்லிம் சமய கலாசார அமைச்சரானதன் பின் நடக்கும் முதல் தேசிய மீலாத் விழாவைக் கண்டி மாவட்டத்துக்கு வெளியே நடாத்திக் காட்டியிருக்க வேண்டும். கிழக்குக்காக கிழக்கு மக்கள் பேசினால் அதனைப் பிரதேசவாதமென்று சொல்லும் றவூ..ப் ஹக்கீம் கண்டிக்கு மட்டும் முன்னுரிமை கொடுப்பது பிரதேசவாதமில்லையா? போராளிகளே! நன்கு சிந்தியுங்கள். இப்படிப்பட்ட ஒருவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவராகலாமா? கூடவே கூடாது!

(16) முன்னாள் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ்வை நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தலைவராக மங்கள சமரவீர



நியமித்தவுடனேயே ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபந்திக்கு டெலிபோன் செய்து 'ஹிஸ்புல்லாஹ்வுக்கு பதவி கொடுக்க வேண்டாம். ஸ்ரீ.ல. மு. காங்கிரஸ்காரர்கள் யாருக்காவது உயர் பதவி வழங்குவதாகவிருந்தால் என்னைக் கேட்டுத்தான் வழங்க வேண்டும்!' என்று றவூ..ப் ஹக்கீம் சொல்லியிருக்கிறார். ஏனென்றால் கிழக்கு மக்களின் - குறிப்பாக மட்டக்களப்பு மாவட்ட மக்களின் அபிமானத்தைப் பெற்ற ஹிஸ்புல்லாஹ்வை மட்டம் தட்டி , ஓரம் கட்டுவதே றவூ..ப் ஹக்கீமின் குறிக்கோள். அதுமட்டுமல்லாது , அந்தப் பதவிக்கும் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரை நியமிப்பதற்கு அவர் எண்ணம் கொண்டிருக்கிறார். இப்படியான பொறாமை பிடித்த , வஞ்சகத்தனமான றவூ..ப் ஹக்கீம் முஸ்லிம் காங்கிரஸின் தலைவரானால் பிற்காலத்தில் என்னவென்ன பேரழிவுகளும் , பெரும் குழப்பங்களும் ஏற்படும் என்பதைப் பற்றி முஸ்லிம் போராளிகள் சிந்திக்க வேண்டும்.

(17) ஸ்ரீ.ல.மு. காங்கிரஸின் தலைமைப் பதவி தனக்கே வழங்கப்பட வேண்டுமென்று பிடிவாதம் பிடித்துக்கொண்டு நிற்பவர் றவூ..ப் ஹக்கீம் . உண்மையிலேயே தலைவர் பதவி தனக்கு வழங்கப்பட வேண்டுமென்று எவனொருவன் கேட்பானோ அவனுக்கு அத் தலைமைப் பதவியை வழங்கக் கூடாது என்பது நபிகளாரின் வாக்கு. அந்த வகையிற் பார்க்கப் போனால், தனக்கே தலைமைத்துவம் வேண்டுமென்று கேட்கும் றவூ..ப் ஹக்கீமை எக்காரணம் கொண்டும் நாம் தலைவராக ஏற்றுக் கொள்ள முடியாது.

(18) றவூ..ப் ஹக்கீமின் நோக்கமெல்லாம் கண்டி மாவட்ட முஸ்லிம் மக்களை எவ்வகையிலாவது திருப்திப்படுத்திக் காலாகாலத்துக்கும் தான் எம்.பி யாக விருப்பதேயல்லாமல் இலங்கை முஸ்லிம்களின் நலன்களைக் கவனிப்பதல்ல. மறைந்த ஏ.ஸீ.எஸ். ஹமீது போன்று தானும் ஆகவேண்டுமென்றே அவர் ஆசைப்படுகிறார். கண்டிக்கு மட்டும் தன் உச்ச சேவைகளை வழங்கிய ஏ.ஸீ.எஸ் ஹமீது தான் இறக்கும் வரை கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராகவிருந்தார். அது போலத் தானும் மௌத்து வரை எம்.பி. யாக இருக்கவே ஹக்கீமும் ஆசைப்படுகிறார். ஆனால் இந்த ஆசைக்கு இலங்கை முஸ்லிம்களோ , ஸ்ரீ.ல.மு. காங்கிரஸோ பலிக்கடாக்களாகி விடக் கூடாது.

(19) முஸ்லிம் போராளிகளே! ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ்காரர் என்று அடையாளம் காணப்பட்ட எவருக்கும் முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களத்தில் பணிப்பாளர் பதவியோ, வேறெந்தப் பதவிகளுமோ தர மாட்டேன் என்று முஸ்லிம் காங்கிரஸின் மூத்த போராளியும் , மார்க்க அறிஞருமான புஹாரி மௌலவியிடம் றவூ..ப் ஹக்கீம் கூறியிருக்கிறார். முஸ்லிம் சமய விவகார அமைச்சில் தனக்கு ஏதேனும் வேலை தரும்படி புஹாரி மௌலவி கேட்டபோதே றவூ..ப் ஹக்கீம் இவ்வாறு கூறியுள்ளார். அப்படியானால், ஸ்ரீ.ல.மு. காங்கிரஸின் மூலம் அமைச்சராகிய றவூ..ப் ஹக்கீம் முஸ்லிம் காங்கிரஸ்காரர்களை எட்டி உதைக்கிறார் என்பதுதானே அர்த்தம்? இப்படிப்பட்ட ஒருவருக்கு நமது கட்சியின் தலைமைத்துவத்தைக் கொடுக்கலாமா?

(20) அம்பாறை மாவட்டத்தில் கரையோர மாவட்டம் என்ற ஒன்றைப் பிரகடனப்படுத்தாமல் சபாநாயகர் தெரிவுக்கு உடன்பட மாட்டோம் என்று கூறியவர் றவூ..ப் ஹக்கீம். சபாநாயகர் தெரிவுக்கு உடன்பட்டு , சபாநாயகர் தெரிவும் நடந்து இன்று பல மாதங்களாகின்றன. ஆனால் கரையோர மாவட்டத்தின் ஓர் ஓரத்தைத்தானும் இன்னமும் காணவில்லை. இவ்வாறு சொல்லொன்றும் செயலொன்றுமாகச் செயற்படும் றவூ..ப் ஹக்கீமுக்கு எவ்வாறு தலைவர் பதவியைக் கொடுக்க முடியும்?

(21) 94களில் சந்திரிக்கா அரசை அமைத்த அஷ்ர..ப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் (MOU) அடிப்படையிலேயே அந்த அரசாங்கத்தை உருவாக்கினார். அதன் மூலம் முஸ்லிம்களுக்கான பல உரிமைகளையும் அபிவிருத்தித் திட்டங்களையும் வென்றெடுத்தார். 99களிலான கூட்டு அரசாங்கத்தில் ஹக்கீம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தவறவிட்டார். இதன் பிரதிபலன் என்னவென்றால் எந்த வகையிலும் அரசாங்கத்திடமிருந்து எதையுமே உத்தரவாதப்படுத்தி பெறமுடியாது. பொதுஜன ஐக்கிய முன்னனியின் போக்கிற்கேற்பவே நாம் இயங்க வேண்டும். ஸ்ரீ. ல. மு. காங்கிரசை நம்பி வாக்களித்த இலட்சக்கணக்கான முஸ்லிம் மக்களின் வாக்குகளை தாரைவார்த்துக் கொடுத்தார். இது அவரது அரசியல் சாணக்கியம் பூஜ்யம் என்பதை தெளிவுபடுத்துகிறது.

(22) ஹக்கீம் சார்பான ஸ்ரீ. ல. மு. காங்கிரசின் அரசியல் அதிஉயர்பீட உறுப்பினர்களான பாரிஸ் ஹாஜி, Dr. ஹப்ரத், உஷேன்பைலா, N. M. ஷஹீட், ஸல்மான் என்பவர்களும் கட்சியின் அரசியல் பீட உறுப்பினர்களான A. P. தஸ்லிம், A. H. M. ஷியாத், M. நயிமுல்லா, M. T. ஹசனலி, மிஸிஸ் ஹைசன், முர்ஷிதீன், Dr. ரிபாய், S. சுபைர்தீன் ஹாஜி, மொஹமட் ஜவ்பர், U. T. M. அன்வர், என்பவர்கள் எல்லாம் சிறந்த கல்விமான்களாகவோ, அரசியல் அனுபவம் வாய்ந்தவர்களாகவோ இல்லை என்பதில் இருந்தும் அவரது அரசியல் சாணக்கியம் தெளிவாகிறது.

இப்படியெல்லாம் ஒரு தலைமைத்துவத்திற்குரிய எவ்வித பண்புகளும் இல்லாத சோப்ளாங்கியை நமது ஸ்ரீ.ல. முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக ஆக்கத்தான் வேண்டுமா? போராளிகளே.....! நமது சமூகத்தின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு சிந்தித்தால் றவூ..ப் ஹக்கீமைத் தலைவராக்குவதற்கு நிச்சயமாக நாம் உடன்பட மாட்டோம்.

எனவே போராளிகளே ! நமது முஸ்லிம் சமுதாயத்தின் விடிவுக்காகவும், விடுதலைக்காகவும் நம்மை அர்ப்பணித்துப் போராடத் தயாராகிவிட்ட நாம் இனியும் தூங்கிக் கொண்டிருக்காமல் விழித்தெழுவோம்! எவ்விதத்திலும் தகுதியற்ற றவூ..ப் ஹக்கீமைத் தலைவராக மட்டுமல்ல - இணைத் தலைவராகக் கூட இல்லாமற் செய்வோம்!

இந்த விடயத்தில் நாம் எல்லோருமே சத்தியத்தின் பக்கம் ஒன்றுபடுவோம்! இன்ஷா அல்லாஹ்............ வெற்றி நமதே!